මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka


මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: **LAE/2024/EPS/20** **2024.10.07**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2024.10.26.
## எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல்

**2024.10.26 ஆம் திகதி நடைபெறவுள்ள எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துரிமை பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் அஞ்சல் மூலம் வாக்களிக்கின்ற வாக்காளர்களுக்குமான அறிவித்தல்**

- ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு மாத்திரம் உரித்தாகும் அதாவது ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்குச் சீட்டு மாத்திரம் விநியோகிக்கப்படும்.
- இத்தேர்தலில் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற வாக்குச் சீட்டில் போட்டியிடுகின்ற கட்சிகளின் பெயர்களும் சின்னங்களும், சுயேச்சைக் குழு போட்டியிடுவதாயின் சுயேச்சைக் குழுவொன்றின் சொற்றொடரோடு அடையாளம் காட்டும் சின்னங்கள் மாத்திரமே அச்சிடப்பட்டிருக்கும். வேட்பாளர்களின் அல்லது வட்டாரங்களின் பெயர்கள் அல்லது இலக்கங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருக்கமாட்டாது.

**வாக்குச் சீட்டின் மாதிரி**

| | | |
|---|---|---|
| "அ" கட்சி | * | |
| "ஆ" கட்சி | * | |
| "இ" கட்சி | * | |
| சுயேச்சைக் குழு | * | |

- வாக்கினை அளிக்கின்ற போது உங்களுக்கு விருப்பமான கட்சியின் பெயர், சின்னம் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் சொற்றொடர் அடையாளம் காட்டும் இலக்கம் மற்றும் சின்னம் உள்ள நிரலில், சின்னத்திற்கு வலப் புறமாகவுள்ள கூட்டில் ஒரேயொரு புள்ளடியை (X) மாத்திரம் இட்டு அடையாளமிடுமாறு தயவன்புடன் அறியத் தரப்படுகின்றது.
- வாக்குச் சீட்டில் வேறெந்த சின்னத்தையும் இடுவதை, வரைவதை அல்லது எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் அத்தியவசியமாகும். ஏனெனில் அவ்வாறு செய்தல் அதாவது பல்வேறு அடையாளங்களை வரைதல், அடையாளமிடல், வாக்காளரை அடையாளம் காண்பதை இயலச் செய்வதற்கான ஒரு முயற்சியாகக் கொள்ளப்பட முடியுமென்பதனாலாகும்.

*வாக்களிப்பதற்காக ஒரேயொரு புள்ளடியை (X) மாத்திரம் பயன்படுத்துங்கள்.*

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்